| | | | |
|---|---|---|---|
| Headline | Memorandum submitted to tackle down manpower shortage issue over HR Minister | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 12 Jun 2019 | Color | Full Color |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 16 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 662 cm² |
| Journalist | NULL | AdValue | RM 4,333 |
| Frequency | Daily | PR Value | RM 12,999 |






அமைச்சர் குலசேகரன்



# ஆள்பலப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண அமைச்சர் குலசேகரனிடம் கோரிக்கை மனு

சூரியகுமார் முருகன், ஆர். பார்த்திபன்

கோலாலம்பூர், ஜூன் 12- இந்தியர்கள் நடத்தும் தொழில்துறைகளில் ஏற்பட்டுள்ள ஆள்பலப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண கோரி மனிதவள அமைச்சர் எம். குலசேகரனிடம் நேற்று கோரிக்கை மனு



சமர்ப்பிக்கப்பட்டது.

மைக்கி உள்ளிட்ட இந்தியர் வர்த்தக அமைப்புகள் ஒன்றுசேர்ந்து இந்தக் கோரிக்கை மனுவை முன்வைத்துள்ளன.

இந்தியர் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் குலசேகரன் நடத்திய சந்திப்பு நேற்று மாலை பிரிக்பீல்ட்ஸ் கந்தையா மண்டபத்தில் நடைபெற்றது.


இந்தச் சந்திப்பின்போது இந்தியர்களின் தொழில்துறைகள் எதிர்நோக்கியுள்ள ஆள்பலப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண அந்நியத் தொழிலாளர்களைக் கொண்டுவரும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஆள்பலப் பற்றாக்குறைக்கு விரைந்து தீர்வு காண வேண்டிய அவசியத்தையும் அங்கு வந்திருந்தவர்கள் வலியுறுத்தினர்.


அந்நியத் தொழிலாளர்களைத் தருவிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

Powered by: isentia

| | | | |
|---|---|---|---|
| Headline | Don't raise minimum wage until productivity rises, say employers | | |
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 12 Jun 2019 | Color | Full Color |
| Section | NEWS | Circulation | 22,000 |
| Page No | 3 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 214 cm² |
| Journalist | NULL | AdValue | RM 1,100 |
| Frequency | Daily | PR Value | RM 3,300 |



# அடிப்படைச் சம்பளத்தை இப்போதைக்கு உயர்த்தாதீர்: முதலாளிகள் சம்மேளனம் கூறுகிறது



கோலாலம்பூர், ஜூன் 12–

போதுமான உற்பத்தி இல்லாமல் உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவினால் தாங்கள் தடுமாறுகின்ற வேளையில் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி விட வேண்டாம் என முதலாளிகள் சம்மேளனம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.

குறைந்தபட்ச அடிப்படைச் சம்பள விகிதம் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை சம்பள ஆலோசனை மன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது. அடுத்த கட்ட மறு ஆய்வு வரும் 2021 ஆம் ஆண்டில் நடைபெறும்.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் இந்த அடிப்படைச் சம்பளம் 1,050 வெள்ளியிலிருந்து 1,100 வெள்ளியாக உயர்த்தப்பட்டது. வரும் ஆகஸ்ட் 2020ஆம் தேதிக்குள் புதிய பரிந்துரைகளை அரசாங்கம் இந்தச் சம்பள பேச்சுவார்த்தைக் குழுவிடம் வழங்கும் என்று மனிதவள அமைச்சர் எம்.குலசேகரன் கூறியிருக்கிறார்.

இது சம்பந்தமான பேச்சுவார்த்தைக் குழு, தனது பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது. ஊழியர்களுக்கான பேச்சுவார்த்தை பற்றி இப்போது பேசப்பட்டுள்ளது. மாறாக உற்பத்தி விகிதத்தை அதிகரிப்பது மீது பேச்சு நடக்கவில்லை என முதலாளிகள் சம்மேளனத்தின் தலைவர் சம்சுடின் பர்டான் கூறினார்.

குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தை 1,500 வெள்ளியாக உயர்த்துவதில் அரசாங்கம் உறுதிப்பாடு கொண்டு, இதில் உள்ள கூடுதல் தொகையை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தாலும், இப்போது அரசாங்கத்திடம் போதுமான நிதி இல்லை என்று கூறப்படுகிறது. எதுவுமே செய்யாமல் 1,500 வெள்ளி சம்பளம் தாருங்கள் என்று எங்களை நிர்ப்பந்தித்தால் நாங்கள் என்ன செய்வது என்று அவர் வினவினார்.

தென் கிழக்காசியாவில் நமது உற்பத்தி விகிதம் 2 ஆவது நிலையில் இருந்தாலும் சம்பள உயர்வு தரும் அளவுக்கு அது போதுமானது அல்ல. மலேசியத் தொழிலாளர்களின் உற்பத்தி விகிதம் வருடாந்திர நிலையில் 1 லட்சம் வெள்ளிக்கு மேல் இல்லை. ஆனல் சிங்கப்பூர் 2 லட்சம் வெள்ளிக்கும் மேலாக அதைப் பதிவு செய்துள்ளது என்றார் அவர்.

Powered by: isentia

| | | | |
|---|---|---|---|
| Headline | 'HUKUMAN' IBU BAPA | | |
| MediaTitle | Harian Metro | | |
| Date | 13 Jun 2019 | Color | Full Color |
| Section | IT @ Metro | Circulation | 112,705 |
| Page No | 61 | Readership | 338,115 |
| Language | Malay | ArticleSize | 609 cm² |
| Journalist | Intan Mas Ayu Shahimi | AdValue | RM 23,991 |
| Frequency | Daily | PR Value | RM 71,973 |





GOLONGAN ibu selalu dilihat kurang kompeten dan komited di tempat kerja berbanding wanita yang tiada anak.

# 'HUKUMAN' IBU BAPA

Mereka sering menghadapi disriminasi di tempat kerja


**Intan Mas Ayu Shahimi**
imas@hmetro.com.my


**Sebagai** anak, tentu kita sedia maklum betapa peritnya cabaran ibu bapa membesarkan zuriat mereka supaya menjadi orang berguna. Lihatlah bagaimana kita sendiri bergelut dengan bebanan kerja di pejabat setiap hari.

Inikan pula ibu bapa yang terpaksa keluar bekerja mencari nafkah buat keluarga, menggalas tanggungjawab membesarkan anak-anak dan menjaga kedua-dua orang tua mereka.



*LELAKI juga tidak lari daripada diskriminasi di pejabat selepas mempunyai anak.*

Tidak cukup dengan itu, cabaran dunia kini turut meletakkan ibu bapa dalam dilema yang tidak berkesudahan. Mereka terikat dengan pelbagai komitmen dan terpaksa berdepan tanggapan negatif yang secara tidak langsung mendiskriminasi kemampuan diri di tempat kerja.

Justeru, dalam menyuarakan kembali hak ibu dan bapa tertindas, Pertubuhan Pertolongan Wanita (WAO) tampil dengan hasil kaji selidik yang fokus terhadap isu berkenaan.

Menurut kajian dijalankan, lebih 40 peratus wanita hamil mengakui pernah berdepan diskriminasi di tempat kerja. Mereka dijadikan pekerja 'lebihan,' dinafikan kenaikan pangkat, dilanjutkan tempoh percubaan, diturunkan pangkat atau langsung dibuang kerja.

Ini dilihat selari dengan hasil kajian sekumpulan penyelidik di Cornell University. Mereka mendapati, golongan ibu dilihat kurang kompeten dan komited berbanding wanita yang tiada anak walaupun kedua-duanya setara dari segi kelulusan akademik. Inilah yang dikenali sebagai penalti keibuan *(motherhood penalty)*. Hukuman sebegini langsung tidak wajar terhadap golongan ibu.

Apa yang dikesalkan, senario ini tidak hanya berlaku dalam kalangan wanita yang sudah memiliki anak. Bahkan insan yang bakal bergelar ibu bapa juga tidak terkecuali daripada menjadi mangsa diskriminasi.

Kira-kira 40 peratus wanita yang terbabit dalam kaji selidik WAO mengakui, ketika sesi temu duga mereka ditanya sama ada sedang mengandung atau merancang untuk hamil. Pihak yang menjalankan temu duga juga dikatakan kerap bertanyakan status perkahwinan wanita yang memohon kerja.

Keadaan ini berbeza dengan sesi temu duga calon pekerja lelaki. Pertanyaan mengenai status perkahwinan atau perancangan membina keluarga tidak diajukan dengan kerap kepada mereka.

Ini secara tidak langsung menunjukkan bahawa orang ramai masih skeptikal terhadap peranan wanita dalam keluarga. Mereka dianggap individu bertanggungjawab menjaga keluarga dan menguruskan segala keperluan anak-anak.

Anggapan seperti inilah yang mendiskriminasikan kemampuan wanita. Dalam sesetengah kes, keadaan ini turut memberi kesan kepada lelaki, khususnya mereka yang bergelar bapa.




Kelompok ini perlu menggalas tanggungjawab menjaga ahli keluarga. Mereka juga memerlukan cuti paterniti dan waktu kerja fleksibel untuk menguruskan anak.

Jadi, tidak dapat tidak, WAO melihat ibu bapa dan mereka yang bakal menimang cahaya mata memerlukan sokongan serta jaminan perlindungan bagi membendung diskriminasi di tempat kerja.

Cadangan pindaan Akta Kerja yang diusulkan Kementerian Sumber Manusia umpamanya, dilihat mampu mengangkat hak ibu bapa, sekali gus memperjuangkan masa depan pekerja.

Dengan pelaksanaan akta berkenaan, WAO yakin kakitangan syarikat dan pemohon kerja akan terpelihara daripada sebarang bentuk diskriminasi disebabkan kehamilan, status perkahwinan, perbezaan gender, kaum, agama, kelainan upaya dan bahasa.

Paling penting, majikan tidak lagi boleh sewenang-wenangnya memberhentikan pekerja atas sebab hamil atau perlu bercuti panjang selepas melahirkan anak dilindungi undang-undang daripada diberhentikan kerja kerana mengandung.

Powered by: isentia

| | | | |
|---|---|---|---|
| Headline | Frozen foreign workers specific areas: Minister do not know why | | |
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 13 Jun 2019 | Color | Full Color |
| Section | NEWS | Circulation | 22,000 |
| Page No | 1,11 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 283 cm² |
| Journalist | NULL | AdValue | RM 1,455 |
| Frequency | Daily | PR Value | RM 4,364 |



### தொழிலாளர் முடக்கம் ஏன்?

# அது எனக்கே தெரியவில்லை..!




## தொழிலாளர் முடக்கம் ஏன்? எனக்கே தெரியவில்லை

**கோலாலம்பூர், ஜூன் 13–**

அந்நியத் தொழிலாளர்களைத் தருவிக்க அரசாங்கம் ஏன் அதை முடக்கி வைத்திருக்கின்றது என்ற காரணம் எனக்கே தெரியவில்லை என்று மனிதவள அமைச்சர் எம்.குலசேகரன் நேற்று கூறினார்.

ஏழு முக்கிய அத்தியாவசியத் துறைகளுக்கு அந்நியத் தொழிலாளர்களைத் தருவிப்பதற்கு கடந்த கால அரசு செய்த முடக்கத்தை இப்போதைய அரசு தொடர்வது ஏன் என்ற காரணம் எனக்கே புரியவில்லை. எனது அதிகாரிகளிடமும் உள்துறை அமைச்சின் அதிகாரிகளிடமும் நானே இந்தக் கேள்விகளைக் கேட்டு வருகிறேன் என்றார் அவர்.

நேற்று முன்தினம் பிரிக்பீல்ட்ஸில் மைக்கி ஏற்பாட்டில் நடந்த முக்கிய இந்தியத் தொழில்துறை சார்ந்தவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் பேசினார். இந்த 7 முக்கிய துறைகளை சார்ந்தவர்கள் தொழிலாளர்களை அமர்த்திக்கொள்ள அனுமதி தரவேண்டும் என நான் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறேன். மற்ற அமைச்சரவை உறுப்பினர்களையும் சம்மதிக்க வைக்க சில காலம் பிடிக்கும் என்றார் அவர். (மைக்கி தலைவர் என்.கோபாலகிருஷ்ணன் இந்நிகழ்ச்சியில் தங்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார். விரிவான செய்திகள் பக்கம் 16 இல்)

–மலேசியா கினி


Powered by: isentia

| | | | |
|---|---|---|---|
| Headline | Call emergency meeting to resolve contract cleaner issues, PSM tells Maszlee | | |
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 13 Jun 2019 | Color | Full Color |
| Section | NEWS | Circulation | 22,000 |
| Page No | 1,11 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 174 cm² |
| Journalist | NULL | AdValue | RM 894 |
| Frequency | Daily | PR Value | RM 2,683 |




# 45,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை இழப்பு

## 3 அமைச்சர்களும் விவாதிக்க வேண்டும்




கோலாலம்பூர், ஜூன் 13–

நாடு தழுவிய நிலையில் ஒப்பந்தப் பணியாளர்கள் வேலை இழந்திருக்கும் விஷயத்தில் தம்மால் முடிந்ததை செய்யவிருப்பதாக கல்வியமைச்சர் மஸ்லி மாலிக் அறிவித்திருப்பதை மலேசிய சோசலிஷ கட்சி வரவேற்பதாக அதன் மத்திய செயலவை உறுப்பினர் எஸ். அருட் செல்வன் கூறினார்.

பக்கம் 11

## 45,000 ஒப்பந்தத்...

ஆனால், அதே நேரத்தில் கல்வியமைச்சர், நிதியமைச்சர், மனிதவள அமைச்சர் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து சந்திப்பு நடத்தினால் மட்டுமே இந்த பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியும் என்றார் அவர்.

அடிப்படைப் பிரச்சினையே ஒப்பந்தத் தொழிலாளர் முறைதான். தேமு காலத்திலிருந்து இது இருந்து வருகிறது. இது வரை சுமார் 45,000 தொழிலாளர்கள் தங்கள் வேலையை இழந்திருக்கிறார்கள்.

இவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பும் சம்பளமும் வழங்கப்பட வேண்டும். 24 மணி நேரத்தில் அவர்களை வேலை நீக்கம் செய்வது மனிதாபிமானம் ஆகாது என்றார் அவர்.

Powered by: isentia